வெளியீடு எண்: 15 மறுபிரசுரம்

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய

# திருப்பள்ளியெழுச்சி,

# திருவெம்பாவை,

ஸ்ரீ ஆண்டாள் அருளிய

# திருப்பாவை.




வெளியிடுவோர்:

**மில்க்வைற் சவர்க்காரத் தொழிலகம்**

த. பெ. இல. 77, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 7233 தந்தி: ''மில்க்வைற்''

கிளை: 79, மெசென்ஜர் வீதி, கொழும்பு-12.

தொலைபேசி: 36063



# பனையை வளர்த்துப்

# பயனைப் பெறுவோம்

10 அடிக்கு ஒரு விதையாக ஒரு சாண் ஆழத்தில் வேலி ஓரங், களிலும், வயல் வரம்புகளிலும் காணி எல்லைகளிலும், வீதி ஓரங்களிலும் நடவும்.

உ

# திருப்பள்ளியெழுச்சி

திருவாசகத்திலுள்ள மற்றொரு பதிகம் திருப்பள்ளியெழுச்சியாகும். இதில் பத்துப் பாடல்கள் உள்ளன. இவை இறைவனைப் பள்ளியினின்றும் எழுந்தருளுமாறு பாடப்பெற்றவை. இறைவன் திருப்பள்ளி கொள்வதாவது எங்கள் உள்ளத்தில் தோன்றாது வேறாய் மறைந்திருத்தலாகும். இந்நிலையையே திரோதானம் எனச் சித்தாந்தம் கூறுவதாகும். இறைவன் எழுந்தருளுவதாவது, திரோதான மறைவு நீங்கி வெளிப்பட்டுத் தோன்றுவதாகும். இங்ஙனம் வெளிப்பட்டுத் தோன்றுமாறு வேண்டிப் பாடிய பாடல்களாதலால் இப்பதிகம் திருப்பள்ளியெழுச்சி எனப் பெயர் பெறுவதாயிற்று. எனவேதான் இதனைத் திரோதானசுத்தி எனப்பெரியோர் கூறினர். இப்பாடல்களையும் பின்சொன்ன திருவெம்பாப் பாடல்களையும் நம்முன்னோர் அவ்வக் காலங்களில் பக்தியுடன் பாடிப் பயன்பெற்றுய்ந்தனர். அங்ஙனமே நாமும் இவற்றை நாள்தோறும் விடியற்காலையில் பாடிப் பயன்பெறுவோமாக. நன்றே செய்வோம். எல்லோரும் வாழ்க!

உ

# திருவெம்பாவை

திருவாதவூரடிகள் எனவும் வழங்கும் மாணிக்கவாசக சுவாமிகள் அருளிய திருவாசகமும், திருக்கோவையாரும் எட்டாந் திருமுறைகளாகும். திருவாசகம் என்னும் தேனில் உள்ள பல பதிகங்களில் திருவெம்பாவையும் ஒன்று. இப்பதிகத்தில் இருபது பாடல்கள் உள்ளன. இவை வெண்டளையால் வந்த தரவுகொச்சகக் கலிப்பா எனப்படுவன. மாதங்களிற் சிறந்த மார்கழி மாதம் வைகறைப்பொழுது போன்றது. மார்கழிமாத நோன்புகளில் பெண்கள் நீராடிச் சக்தியை வணங்குவதும் ஒன்று. நீராடச் செல்லும் பெண்கள் தங்கள் தோழியரை வழிதோறும் நித்திரை விட்டெழுப்பி அழைத்துச் செல்லுவது வழக்கம். இதைப் பக்குவம் முதிர்ந்த ஆன்மா, பக்குவம் பெறாது மல இருளில் அழுந்திக்கிடக்கும் ஆன்மாவை எழுப்பி இறைவனின் அருள்நீரில் திளைப்பதற்கு அழைத்துச் செல்வதாகத் தத்துவப் பொருள் கூறுவர். இப்பாடல்கள் திருவருளாகிய சக்தியைப் புகழ்வன. திருவருள் பெற்ற பின்னரே இறைவனை அடைதல் வேண்டுமாகையால் திருவருள் வழிபாடு அவசியமாகும். சைவசமயத்தவருக்குத் திருவெம்பாவை போல வைஷ்ணவருக்குத் திருப்பாவை அமைந்துள்ளதாகும்.

""திருஆலவாய்""
யாழ்ப்பாணம்.

க. கனகராசா ஜே. பி.

உ
சிவமயம்
திருப்பெருந்துறையில் பாடியருளிய

# திருப்பள்ளியெழுச்சி

○ (திரோதானசுத்தி)

எண்சீர்க் கழிநெடிலடி யாசிரிய விருத்தம்

திருச்சிற்றம்பலம்

போற்றி! என் வாழ்முதல் ஆகிய பொருளே!
புலர்ந்தது பூங்கழற் கிணைதுணை மலர்கொண்
டேற்றிநின் திருமுகத் தெமக்கருள் மலரும்
எழில்நகை கொண்டுநின் திருவடி தொழுகோம்
சேற்றிதழ்க் கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
ஏற்றுயர் கொடிஉடையாய்! எனை உடையாய்!
எம்பெரு மான்! பள்ளி எழுந்தருளாயே. 1

---

○ மறைப்பு நீக்கம்

அருணன்இந் திரன்றிசை அணுகினன் இருள்போய்
அகன்றது உதயம்நின் மலர்த்திரு முகத்தின்
கருணையின் சூரியன் எழஎழ நயனக்
கடிமலர் மலரமற் றண்ணல்அங் கண்ணாம்
திரள்நிரை அறுபதம் முரல்வன இவைஓர்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
அருள்நிதி தரவரும் ஆனந்த மலையே!
அலைகடலே! பள்ளி எழுந்தருளாயே. 2

கூவின பூங்குயில் கூவின கோழி
குருகுகள் இயம்பின இயம்பின சங்கம்
ஓவின தாரகை யொளிஒளி உதயத்து
ஒருப்படு கின்றது விருப்பொடு நமக்குத்
தேவ!நற் செறிகழல் தாளிணை காட்டாய்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
யாவரும் அறிவரி யாய்!எமக் கெளியாய்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தருளாயே. 3

இன்னிசை வீணையர் யாழினர் ஒருபால்
இருக்கொடு தோத்திரம் இயம்பினர் ஒருபால்
துன்னிய பிணைமலர்க் கையினர் ஒருபால்
தொழுகையர் அழுகையர் துவள்கையர் ஒருபால்
சென்னியில் அஞ்சலி கூப்பினர் ஒருபால்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
என்னையும் ஆண்டுகொண் டின்னருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தருளாயே. 4

பூதங்கள் தோறும்நின் றாய்எனின் அல்லால்
போக்கிலன் வரவிலன் எனநினைப் புலவோர்
கீதங்கள் பாடுதல் ஆடுதல் அல்லால்
கேட்டறி யோம்உனைக் கண்டறி வாரைச்
சீதங்கொள் வயல்திருப் பெருந்துறை மன்னா!
சிந்தனைக் கும்அரி யாய்!எங்கள் முன்வந்(து)
ஏதங்கள் அறுத்தெம்மை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே. 5

பப்பற வீட்டிருந் துணரும்நின் அடியார்
பந்தனை வந்தறுத் தார்அவர் பலரும்
மைப்புறு கண்ணியர் மானுடத் தியல்பின்
வணங்குகின் றார்அணங் கின்மண வாளா!
செப்புறு கமலங்கள் மலரும்தண் வயல்சூழ்
திருப்பெருந் துறைஉறை சிவபெரு மானே!
இப்பிறப் பறுத்தெமை ஆண்டருள் புரியும்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே. 6

அதுபழச் சுவையென அமுதென அறிதற்(கு)
அரிதென எளிதென அமரரும் அறியார்
இதுஅவன் திருவுரு இவன்அவன் எனவே
எங்களை ஆண்டுகொண் டு இங்கெழுந் தருளும்
மதுவளர் பொழில்திரு உத்தர கோச
மங்கைஉள் ளாய்!திருப் பெருந்துறை மன்னா!
எதுஎமைப் பணிகொளும் ஆறது கேட்போம்
எம்பெரு மான்!பள்ளி எழுந்தருளாயே. 7

முந்திய முதல்நடு இறுதியும் ஆனாய்
மூவரும் அறிகிலர் யாவர்மற் றறிவார்?
பந்தணை விரலியும் நீயும்நின் அடியார்
பழங்குடில் தொறும்எழுந் தருளிய பரனே
செந்தழல் புரைதிரு மேனியும் காட்டித்
திருப்பெருந் துறைஉறை கோயிலும் காட்டி
அந்தணன் ஆவதும் காட்டிவந் தாண்டாய்!
ஆரமு தே!பள்ளி எழுந்தரு ளாயே. 8

விண்ணகத் தேவரும் நண்ணவும் மாட்டா
விழுப்பொரு ளே!உன தொழுப்படி யோங்கள்
மண்ணகத் தேவந்து வாழச்செய் தானே!
வண்திருப் பெருந்துறை யாய்!வழி யடியோம்!
கண்ணகத் தேநின்று களிதரு தேனே!
கடலமு தே!கரும் பே!விரும் படியார்
எண்ணகத் தாய்!உல குக்குயி ரானாய்!
எம்பெரு மான்!பள்ளி எழுந்தரு ளாயே. 9

புவனியில் போய்ப்பிற வாமையில் நாள்நாம்
போக்குகின் றோம்அவ மேஇந்தப் பூமி
சிவன்உய்யக் கொள்கின்ற வாறென்று நோக்கித்
திருப்பெருந் துறைஉறை வாய்!திரு மாலாம்
அவன்விருப் பெய்தவும் மலரவன் ஆசைப்
படவும்நின் அலர்ந்தமெய்க் கருணையும் நீயும்
அவனியிற் புகுந்தெமை ஆட்கொள்ள வல்லாய்!
ஆரமு தே!பள்ளி எழுந்தரு ளாயே. 10

திருச்சிற்றம்பலம்

## திருவாதவூரடிகள் துதியும் வாழ்த்தும்

எழுதரு மறைகள் தேறா இறைவனை எல்லிற் கங்குற்
பொழுதறு காலத் தென்றும் பூசனை விடாது செய்து
தொழுதகை தலைமே லேறத் துளும்புகண் ணீருள் மூழ்கி
அழுதடி அடைந்த அன்பன் அடியவர்க் கடிமை செய்வாம்.

வான்முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன்முறை யரசு செய்க குறைவிலா துயிர்கள் வாழ்க
நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மைகொள் சைவ நீதி விளங்குக உலக மெல்லாம்.

உ

சிவமயம்

# திருப்பள்ளியெழுச்சி நுதலிய பொருள்

1. நம் வாழ்வுக்கு முதலாய் உள்ளவர் இறைவன் ஒருவரே.
2. இறைவன் அருள்வடிவாயும், ஆனந்தவடிவாயும் உள்ளவர்.
3. உள்ளத்தில் மறைந்திருக்கும் திருவருள் வெளிப்பட்டுத் தோன்ற வேண்டும்.
4. அதிகாலையில் அடியவர்கள் இறைவன் முன்நின்று வழிபடுவர்.
5. இறைவன் காட்சிக்கு அரியவன்.
6. அதிகாலையில் முற்றுந்துறந்தவரும் இறைவனை வழிபடுவர்.
7. தேவர்கள் காணமுடியாத இறைவன் அடியாருக்கு எளிதில் காட்சி கொடுக்கிறார்.
8. இறைவன் பெருங்கருணைத் தடங்கடல்.
9. இறைவன் ஆன்மாக்களுக்குப் பேரின்பம் நல்குபவர்.
10. இறைவன் ஆன்மாக்களை ஆட்கொள்ளும் இடம் இம்மண்ணுலகமேயாம்.

உ

சிவமயம்

மாணிக்கவாசக சுவாமிகளின் திருவாசகத்திலுள்ள

# திருவெம்பாவை

(சக்தியை வியந்தது)

---

வெண்டளையால் வந்த தரவு கொச்சகக் கலிப்பா

திருச்சிற்றம்பலம்

ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள்தடங்கண்
மாதே, வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதார் அமளியின்மேல் நின்றும் புரண்(டு) இங்ஙன்
ஏதேனும் ஆகாள் கிடந்தாள்என் னேஎன்னே
ஈதேஎந் தோழி பரிசேலோர் எம்பாவாய்! 1

பாசம் பரஞ்சோதிக்(கு)என்பாய் இராப்பகல்நாம்
பேசும்போ(து) எப்போ(து)இப் போதார் அமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய்; நேரிழையீர்!
சீசீ இவையுஞ் சிலவோ விளையாடி
ஏசும் இடம்ஈதோ; விண்ணோர்கள் ஏத்துதற்குக்
கூசும் மலர்ப்பாதந் தந்தருள வந்தருளும்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
ஈசனார்க்(கு) அன்(பு)ஆர்யாம் ஆர்ஏலோர் எம்பாவாய்! 2

முத்தன்ன வெண்ணகையாய்! முன்வந்து எதிரெழுந்(து)என்
அத்தன்ஆ னந்தன் அமுதன்என்(று) அள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்(து)உன் கடைதிறவாய்;
பத்துடையீர்! ஈசன் பழவடியீர்! பாங்குடையீர்!
புத்தடியோம் புன்மைதீர்த்(து) ஆட்கொண்டால் பொல்லா
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ [தோ;
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்! 3

ஒள்நித் திலநகையாய்! இன்னம் புலர்ந்தின்றோ;
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ;
எண்ணிக்கொ(டு) உள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்(று)அவமே காலத்தைப் போக்காதே;
விண்ணுக்(கு) ஒருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக்(கு) இனியானைப் பாடிக் கசிந்(து)உள்ளம்
உள்நெக்கு நின்(று)உருக யாம்மாட்டோம்; நீயேவந்(து)
எண்ணிக் குறையில் துயில்ஏலோர் எம்பாவாய்! 4

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ! கடைதிறவாய்;
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டுஞ்
சீலமும் பாடிச் சிவனே சிவனேஎன்(று)
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்;
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்! 5

மானே!நீ நென்னலை 'நாளைவந்(து) உங்களை
நானே எழுப்புவன்' என்றலும் நாணாமே
போன திசைபகராய்; இன்னம் புலர்ந்தின்றோ;
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந்து எம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குஉன் வாய்திறவாய்;
ஊனே உருகாய்; உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்! 6

அன்னே! இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற்(கு) அரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவன்என்றே வாய்திறப்பாய்;
தென்னாஎன் னாமுன்னந் தீசேர் மெழு(கு)ஒப்பாய்;
என்ஆனை என்அரையன் இன்னமு(து) என்(று)எல்லேமுஞ்
சொன்னோம்கேள் வெவ்வேறாய்; இன்னம் துயிலுதியோ;
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்;
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்! 7

கோழி சிலம்பச் சிலம்பும் குரு(கு)எங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்(கு)எங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ(து) என்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்! 8

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும்அப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்(கு) அவர்க்கேபாங்கா
அன்னவரே எங்கணவர் ஆவார் அவர்உகந்து [வோம்
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோம்ஏலோர் எம்பாவாய்! 9

பாதாளம் ஏழினும்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்
ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
கோதில் குலத்தரன்றன் கோயிற்பிணாப் பிள்ளைகாள்
ஏதவன்ஊர் ஏதவன்பேர் ஆர்உற்றார் ஆர்அயலார்
ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்! 10

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேர்என்னக்
கையால் குடைந்து குடைந்(து)உன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோம்காண் ஆரழல்போல்
செய்யா!வெண் ணீறாடி! செல்வா! சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா!
ஐயா!நீ ஆட்கொண்(டு) அருளும் விளையாட்டின்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்(து)ஒழிந்தோம்
எய்யாமல் காப்பாய் எமையேலோர் எம்பாவாய். 11

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
தீர்த்தன்நற் றில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானும் குவலயமும் எல்லோமும்
காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்(து)உடையான் பொற்பாதம்
ஏத்தி இருஞ்சுனைநீர் ஆடேலோர் எம்பாவாய்! 12

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
அங்கம் குருகினத்தாற் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினல்
எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவில் புகப்பாய்ந்து பாய்ந்துநம்
சங்கம் சிலம்பச் சிலம்பு கலந்(து)ஆர்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்! 13

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருள்ஆ மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்! 14

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீர்ஒருகால் வாய்ஓவாள் சித்தம் களிகூர
நீர்ஒருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பார்ஒருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேர்அரையற்(கு) இங்ஙனே பித்(து)ஒருவர் ஆமாறும்
ஆர்ஒருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வார்உருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏர்உருவப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்! 15

முன்னிக் கடலைச் சுருக்கி எழுந்(து)உடையாள்
என்னத் திகழ்ந்(து)எம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்(து)எம் பிராட்டி திருவடிமேல்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமா னன்பர்க்கு
முன்னி யவள்நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்! *16*

செங்க ணவன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி! நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்
செங்கமலப் பொற்பாதம் தந்தருளும் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்! *17*

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாம்அகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணார் அமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேஇப் பூம்புனல்பாய்ந்(து) ஆடேலோர் எம்பாவாய்! 18

உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம் என்(று)
அங்கப் பழஞ்சொல் புதுக்கும்எம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்அன்பர் அல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியும் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றும் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன்! நல்குதியேல்
எங்கெழில்என் ஞாயி(று) எமக்கேலோர் எம்பாவாய்! 19

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாம் செந்தளிர்கள்
போற்றிஎல் லாஉயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாஉயிர்க்கும் ஈறும் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய். 20

திருச்சிற்றம்பலம்

## திருப்பள்ளியெழுச்சியின் உண்மைக் கருத்து

''ஏர்மருவு திருப்பள்ளி யெழுச்சி பணிவிடைகேட்(டு)
ஆர்வமுட னுண்ட அரற்(கு)அன்பு செயுமியல்பே''

## திருவெம்பாவையின் உண்மைக் கருத்து

''மலவிருளுற் றுறங்காமல் மன்னுபரி பாகர்அருட்
செலமுழுக வருகளனச் செப்பல்திரு வெம்பாவை''

உ

# திருவெம்பாவை நுதலிய பொருள்

1. பக்குவம் நிறைந்தோர் இறைவன் திருநாமத்தைக் கேட்டதும் மெய்மறந்திருப்பர்.
2. நல்லவர்கள் இறைவனிடமே அன்பு செலுத்துவர்.
3. இறைவன் திருநாமம் கூறுவார்க்கு இன்பம் பயக்கும்.
4. இறைவன் பெருமையிலும், அழகிலும் ஈடுபட்டோர் உருகுவர்.
5. இறைவனை ஊனக்கண்ணாற் காணமுடியாது. அருட்கண்ணாலேயே காணலாம்.
6. பாடி ஆடி மனங்குழையும் அன்பர்களுக்கு இறைவன் தானே எழுந்தருளுவன்.
7. இறைவனிடத்தில் பேரன்புடையவர்களையும் உறக்கம் தன்வசப் படுத்திவிடும்.
8. இறைவனிடம் அன்பு செய்வதற்கு உறக்கம் தடையாகும்.
9. மெய்யடியாரின் தாள்பணிந்து பணிசெய்தல் பெரும்பயன் தருவதாகும்.
10. இறைவன் பெருமையை எவராலும் அளவிட்டு உரைத்தல் இயலாது. அதுசொல்லொணாதது.

11. சுவர்க்கம் முதலிய போகங்களிற் பார்க்க வீடுபேறே சிறந்ததாகும்.
12. இறைவன் ஆன்மாக்கள் மேல் இரங்கியே படைத்தல், காத்தல், அழித்தல் முதலிய அருட்செயல்களைச் செய்தருளுகிறார்.
13. இறைவன் படைப்பில் எப்பொருள்களையும் இறைவனைக் காணுதலே சிறப்பாகும்.
14. இறைவனது அருட்சத்தி என்றும் உபகரித்துக்கொண்டே இருப்பவள்.
15. பக்குவம் நிறைந்த மெய்யடியார்கள் தம்வயம் இழந்து இருப்பர்.
16. இறைவன் சத்தி மூலமாக மெய்யடியார்களுக்கு அருளை வழங்குகின்றான்.
17. இறைவன் தன் திருவடி இன்பத்தைத் தானே எளிவந்தருளுகின்றான்.
18. இறைவன் எல்லாப் பொருள்களிலும் நீக்கமின்றி நிறைந்திருக்கின்றான்.
19. இறைபணி நிற்பவர்கள் உறுதியுள்ளவர்கள்.
20. இறைவன் உலகத்துக்கு முதலாகவும், முடிபாகவும் இருக்கின்றான். அவன் பொற்பாதம் எல்லாமாகும்.

தயாரித்தவர்: க. சி. குலரத்தினம்

உ

சிவமயம்

ஸ்ரீ ஆண்டாள் அருளிச்செய்த

# திருப்பாவை

மார்கழித் திங்கள் மதிநிறைந்த நன்னாளால்
நீராடப் போதுவீர்! போதுமினோ, நேரிழையீர்!
சீர்மல்கும் ஆய்ப்பாடிச் செல்வச் சிறுமீர்காள்!
கூர்வேல்-கொடுந்தொழிலன் நந்தகோ பன்குமரன்,
ஏரார்ந்த கண்ணி யசோதை இளஞ்சிங்கம்,
கார்மேனிச் செங்கண் கதிர்மதியம் போல்முகத்தான்
நாராயணனே, நமக்கே பறைதருவான்,
பாரோர் புகழப் படிந்தேலோ ரெம்பாவாய். 1

வையத்து வாழ்வீர்காள்! நாமும்நம் பாவைக்குச்
செய்யும் கிரிசைகள் கேளீரோ! பாற்கடலுள்
பையத் துயின்ற பரமன் அடிபாடி
நெய்யுண்ணோம்; பாலுண்ணோம்: நாட்காலை நீராடி
மையிட் டெழுதோம்; மலரிட்டு நாம்முடியோம்;
செய்யாதன செய்யோம்; தீக்குறளை சென்றோதோம்;
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமா றெண்ணி உகந்தேலோ ரெம்பாவாய். 2

ஓங்கி உலகளந்த உத்தமன் பேர்பாடி
நாங்கள்நம் பாவைக்குச் சாற்றுநீர் ஆடினல்,
தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரிபெய்து;
ஓங்கு பெருஞ்செந்நெ லூடு கயல் உகளப்
பூங்குவளைப் போதில் பொறிவண்டு கண்படுப்பத்
தேங்காதே புக்கிருந்து சீர்த்த முலைபற்றி
வாங்கக், குடம் நிறைக்கும் வள்ளல்-பெரும்பசுக்கள்,
நீங்காத செல்வம் நிறைந்தேலோ ரெம்பார்வாய். 3

ஆழி மழைக்கண்ணா! ஒன்றும்நீ கைகரவேல்;
ஆழியுள் புக்கு முகந்துகொடு ஆர்த்தேறி,
ஊழி முதல்வன் உருவம்போல் மெய்கறுத்துப்
பாழியந் தோளுடைப் பற்பநா பன்கையில்
ஆழிபோல் மின்னி, வலம்புரிபோல் நின்றதிர்ந்து,
தாழாதே சார்ங்கம் உதைத்த சரமழைபோல்,
வாழ உலகினில் பெய்திடாய், நாங்களும்
மார்கழி நீராட மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 4

மாயனை மன்னு வடமதுரை மைந்தனை
தூய பெருநீர் யமுனைத் துறைவனை,
ஆயர் குலத்தினில் தோன்றும் அணிவிளக்கை,
தாயைக் குடல்விளக்கம் செய்ததா மோதரனை,
தூயோமாய் வந்துநாம் தூமலர்தூ வித்தொழுது
வாயினால் பாடி, மனத்தினால் சிந்திக்க,
போய பிழையும் புகுதருவான், நின்றனவும்
தீயினில் தூசாகும், செப்பேலோ ரெம்பாவாய். 5

புள்ளும் சிலம்பினகாண்; புள்ளரையன் கோயிலில்
வெள்ளை விளிசங்கின் பேரரவம் கேட்டிலையோ?
பிள்ளாய்! எழுந்திராய், பேய்முலை நஞ்சுண்டு,
கள்ளச் சகடம் கலக்கழியக் காலோச்சி,
வெள்ளத் தரவில் துயிலமர்ந்த வித்தினை
உள்ளத்துக் கொண்டு முனிவர்களும் யோகிகளும்
மெள்ள எழுந்து அரியென்ற பேரரவம்
உள்ளம் புகுந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 6

கீசுகீ சென்றுஎங்கும் ஆனைச்சாத்தம் கலந்து
பேசின பேச்சரவம் கேட்டிலையோ? பேய்ப்பெண்ணே!
காசும் பிறப்பும் கலகலப்பக் கைபேர்த்து
வாச நறுங்குழல் ஆய்ச்சியர் மத்தினால்
ஓசைப் படுத்த தயிரரவம் கேட்டிலையோ?
நாயகப் பெண்பிள்ளாய்! நாராயணன் மூர்த்தி
கேசவனைப் பாடவும்நீ கேட்டே கிடத்தியோ?
தேச முடையாய்! திறவேலோ ரெம்பாவாய். 7

கீழ்வானம் வெள்ளென்று, எருமை சிறுவீடு
மேய்வான் பரந்தனகாண்; மிக்குள்ள பிள்ளைகளும்
போவான்போ கின்றாரைப் போகாமல் காத்துஉன்னைக்
கூவுவான் வந்து நின்றோம்; கோது கலமுடைய
பாவாய்! எழுந்திராய்; பாடிப் பறைகொண்டு
மாவாய் பிளந்தானை, மல்லரை மாட்டிய
தேவாதி தேவனைச் சென்றுநாம் சேவித்தால்
ஆவாவென் றாராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 8

தூமணி மாடத்துச் சுற்றும் விளக்கெரிய,
தூபங் கமழத் துயிலணை மேல் கண்வளரும்
மாமன் மகளே! மணிக்கதவம் தாள்திறவாய்;
மாமீர்! அவளை எழுப்பீரோ? உன் மகள்தான்
ஊமையோ? அன்றிச் செவிடோ? அனந்தலோ?
ஏமப் பெருந்துயில் மந்திரப் பட்டாளோ?
'மாமாயன், மாதவன், வைகுந்தன்' என்றென்று
நாமம் பலவும் நவின்றேலோ ரெம்பாவாய். 9

நோற்றுச் சுவர்க்கம் புகுகின்ற அம்மனாய்!
மாற்றமும் தாராரோ? வாசல் திறவாதார்
நாற்றத் துழாய்முடி நாரா யணன்நம்மால்
போற்றப் பறைதரும் புண்ணியனால் பண்டொருநாள்
கூற்றத்தின் வாய்வீழ்ந்த கும்ப கரணனும்
தோற்றும் உனக்கே பெருந்துயில்தான் தந்தானோ?
ஆற்ற அனந்தல் உடையாய்! அருங்கலமே!
தோற்றமாய் வந்து திறவேலோ ரெம்பாவாய். 10

கற்றுக் கறவைக் கணங்கள் பலகறந்து,
செற்றார் திறலழியச் சென்று செருச்செய்யும்
குற்றமொன் றில்லாத கோவலர்தம் பொற்கொடியே!
புற்றர வல்குல் புனமயிலே! போதராய்!
சுற்றத்துத் தோழிமார் எல்லாரும் வந்துநின்
முற்றம் புகுந்து முகில்வண்ணன் பேர்பாட,
சிற்றாதே பேசாதே செல்வப்பெண் டாட்டி!நீ
எற்றுக்கு உறங்கும் பொருளேலோ ரெம்பாவாய்! 11

கனைத்திளங் கற்றெருமை கன்றுக் கிரங்கி
நினைத்து முலைவழியே நின்றுபால் சோர
நனைத்தில்லம் சேறாக்கும் நற்செல்வன் தங்காய்!
பனித்தலை வீழநின் வாசற் கடைபற்றிச்
சினத்தினால் தென்னிலங்கைக் கோமானைச் செற்ற
மனத்துக் கினியானைப் பாடவும், நீ வாய்திறவாய்!
இனித்தான் எழுந்திராய்; ஈதென்ன பேருறக்கம்!
அனைத்தில்லத் தாரும் அறிந்தேலோ ரெம்பாவாய். 12

புள்ளின்வாய் கீண்டானை, பொல்லா அரக்கனைக்
கிள்ளிக் களைந்தானைக் கீர்த்திமை பாடிப்போய்,
பிள்ளைகள் எல்லாரும் பாவைக் களம்புக்கார்;
வெள்ளி எழுந்து, வியாழம் உறங்கிற்று;
புள்ளும் சிலம்பினகாண்; போதரிக் கண்ணினாய்!
குள்ளக் குளிரக் குடைந்துநீ ராடாதே,
பள்ளிக் கிடத்தியோ? பாவாய்! நீ நன்னாளால்
கள்ளம் தவிர்ந்துக் கலந்தேலோ ரெம்பாவாய். 13

உங்கள் புழைக்கடைத் தோட்டத்து வாவியுள்
செங்கழுநீர் வாய்நெகிழ்ந்து ஆம்பல்வாய் கூப்பினகாண்;
செங்கல் பொடிக்கூறை வெண்பல் தவத்தவர்,
தங்கள் திருக்கோயில் சங்கிடுவான் போகின்றார்;
எங்களை முன்னம் எழுப்புவான் வாய்பேசும்
நங்காய்! எழுந்திராய், நாணாதாய்! நாவுடையாய்!
சங்கொடு சக்கரம் ஏந்தும் தடக்கையன்
பங்கயக் கண்ணானைப் பாடேலோ ரெம்பாவாய். 14

எல்லே! இளங்கிளியே! இன்னம் உறங்குதியோ?
சில்லென் றழையேன்மின்! நங்கைமீர்! போதர்கின்றேன்
வல்லை, உன் கட்டுரைகள்! பண்டேஉன் வாயறிதும்!
வல்லீர்கள் நீங்களே, நானேதான் ஆயிடுக!
ஒல்லைநீ போதாய், உனக்கென்ன வேறுடையை?
எல்லாரும் போந்தாரோ? போந்தார், போந்தெண்ணிக்
வல்லானை கொன்றானை, மாற்றாரை மாற்றழிக்க [கொள்;
வல்லானை, மாயனைப் பாடேலோ ரெம்பாவாய். 15

நாயக னாய்நின்ற நந்தகோ பனுடைய
கோயில் காப்பானே! கொடித்தோன்றும் தோரண
வாயில் காப்பானே! மணிக்கதவம் தாள்திறவாய்,
ஆயர் சிறுமிய ரோமுக்கு அறைபறை
மாயன் மணிவண்ணன் நென்னலே வாய்நேர்ந்தான்;
தூயோமாய் வந்தோம்! துயிலெழப் பாடுவான்;
வாயால் முன்னமுன்னம் மாற்றாதே அம்மா! நீ
நேய நிலைக்கதவம் நீக்கேலோ ரெம்பாவாய். 16

அம்பரமே, தண்ணீரே, சோறே அறஞ்செய்யும்
எம்பெருமான்! நந்தகோ பாலா! எழுந்திராய்!
கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே!
எம்பெரு மாட்டி! யசோதாய்! அறிவுறாய்;
அம்பரம் ஊடறுத் தோங்கி உலகளந்த
உம்பர்கோ மானே! உறங்காது எழுந்திராய்;
செம்பொற் கழலடிச் செல்வா! பலதேவா!
உம்பியும் நீயும் உறங்கேலோ ரெம்பாவாய். 17

உந்து மதகளிற்றன், ஓடாத தோள்வலியன்,
நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
கந்தம் கமழும் குழலீ! கடைதிறவாய்!
வந்து எங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
பந்தல்மேல் பல்கால் குயிலினங்கள் கூவினகாண்;
பந்தார் விரலி! உன் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையால் சீரார் வளையொலிப்ப
வந்து திறவாய், மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 18

குத்து விளக்கெரியக் கோட்டுக்கால் கட்டில்மேல்
மெத்தென்ற பஞ்ச சயனத்தின் மேலேறிக்
கொத்தலர் பூங்குழல் நப்பின்னை கொங்கைமேல்
வைத்துக் கிடந்த மலர்மார்பா! வாய்திறவாய்!
மைத்தடங் கண்ணினாய்! நீஉன் மணாளனை
எத்தனை போதும் துயிலெழ வொட்டாய்காண்,
எத்தனை யேலும் பிரிவாற்ற கில்லாயால்!
தத்துவம் அன்று தகவேலோ ரெம்பாவாய். 19

முப்பத்து மூவர் அமரர்க்கு முன்சென்று
கப்பம் தவிர்க்கும் கலியே! துயிலெழாய்;
செப்பம் உடையாய்! திறலுடையாய் செற்றார்க்கு
வெப்பம் கொடுக்கும் விமலா! துயிலெழாய்!
செப்பன்ன மென்முலைச் செவ்வாய் சிறுமருங்குல்
நப்பின்னை நங்காய்! திருவே! துயிலெழாய்;
உக்கமும் தட்டொளியும் தந்து உன்மணாளனை
இப்போதே எம்மை நீராட்டேலோ ரெம்பாவாய். 20

ஏற்ற கலங்கள் எதிர்பொங்கி மீதளிப்ப
மாற்றாதே பால்சொரியும் வள்ளல் பெரும்பசுக்கள்
ஆற்றப் படைத்தான் மகனே! அறிவுறாய்!
ஊற்றம் உடையாய்! பெரியாய்! உலகினில்
தோற்றமாய் நின்ற சுடரே! துயிலெழாய்;
மாற்றார் உனக்கு வலிதொலைந்து உன்வாசற்கண்
ஆற்றாது வந்து உன்அடிபணியு மாப்போலே,
போற்றியாம் வந்தோம் புகழ்ந்தேலோ ரெம்பாவாய். 21

அங்கண்மா ஞாலத் தரசர் அபிமான
பங்கமாய் வந்துநின் பள்ளிக்கட் டிற்கீழே
சங்கம் இருப்பார்போல், வந்துதலைப் பெய்தோம்,
கிங்கிணி வாய்ச்செய்த தாமரைப் பூப்போலே,
செங்கண் சிறுச்சிறிதே எம்மேல் விழியாவோ?
திங்களும் ஆதித்தியனும் எழுந்தாற்போல்,
அங்கண் இரண்டுங்கொண்டு எங்கள்மேல் நோக்குதியேல்
எங்கள்மேல் சாபம் இழிந்தேலோ ரெம்பாவாய். 22

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டுப்
போதருமாப் போலேநீ, பூவைப்பூ வண்ணா! உன்
கோயில்நின் றிங்ஙனே போந்தருளிக் கோப்புடைய
சீரிய சிங்காசனத்திருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந் தருளேலோ ரெம்பாவாய். 23

அன்று இவ்வுலகம் அளந்தாய்! அடிபோற்றி,
சென்றங்குத் தென்னிலங்கை செற்றாய்! திறல்போற்றி
பொன்றச் சகடம் உதைத்தாய்! புகழ்போற்றி,
கன்று குணிலா எறிந்தாய்! கழல்போற்றி,
குன்று குடையாய் எடுத்தாய்! குணம்போற்றி,
வென்று பகைகெடுக்கும் நின்கையில் வேல்போற்றி,
என்றென்றும் உன்சேவகமே ஏத்திப் பறைகொள்வான்
இன்றுயாம் வந்தோம், இரங்கேலோ ரெம்பாவாய். 24

ஒருத்தி மகனாய் பிறந்து, ஓரிரவில்
ஒருத்தி மகனாய் ஒளித்து வளர
தரிக்கிலா னாகித் தான்தீங்கு நினைந்த
கருத்தைப் பிழைப்பித்துக் கஞ்சன் வயிற்றில்
நெருப்பென்ன நின்ற நெடுமாலே! உன்னை
அருத்தித்து வந்தோம்: பறைதருதி யாகில்,
திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம்பாடி
வருத்தமும் தீர்ந்து மகிழ்ந்தேலோ ரெம்பாவாய். 25

மாலே! மணிவண்ணு! மார்கழிநீ ராடுவான்
மேலையார் செய்வனகள் வேண்டுவன கேட்டியேல்:
ஞாலத்தை எல்லாம் நடுங்க முரல்வன
பாலன்ன வண்ணத்து உன்பாஞ்ச சன்னியமே
போல்வன சங்கங்கள், போய்ப்பா டுடையனவே
சாலப் பெரும்பறையே, பல்லாண் டிசைப்பாரே,
கோல விளக்கே, கொடியே, விதானமே,
ஆலின் இலையாய்! அருளேலோ ரெம்பாவாய். 26

கூடாரை வெல்லும்சீர்க் கோவிந்தா! உன்தன்னைப்
பாடிப் பறைகொண்டு யாம்பெறு சம்மானம்;
நாடு புகழும் பரிசினல் நன்ருக,
சூடகமே தோள்வளையே தோடே செவிப்பூவே
பாடகமே என்றனைய பல்கலனும் யாம் அணிவோம்;
ஆடை உடுப்போம்; அதன்பின்னே பாற்சோறு
மூட, நெய் பெய்து முழங்கை வழிவாரக்
கூடி யிருந்து குளிர்ந்தேலோ ரெம்பாவாய். 27

கறவைகள் பின்சென்று கானம்சேர்ந் துண்போம்!
அறிவொன்றும் இல்லாத ஆய்க்குலத்து உன்தன்னைப்
பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்;
குறைவொன்றும் இல்லாத கோவிந்தா! உன்தன்னோடு
உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது!
அறியாத பிள்ளைகளோம் அன்பினால் உன்தன்னைச்
சிறுபேர் அழைத்தனவும் சீறி அருளாதே,
இறைவா!நீ தாராய் பறையேலோ ரெம்பாவாய். 28

சிற்றஞ் சிறுகாலே வந்துன்னைச் சேவித்து உன்
பொற்றா மரையடியே போற்றும் பொருள்கேளாய்;
பெற்றம் மேய்த்துண்ணும் குலத்தில் பிறந்துநீ
குற்றேவல் எங்களைக் கொள்ளாமல் போகாது;
இற்றைப் பறைகொள்வான் அன்றுகாண்; கோவிந்தா!
எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு
உற்றோமே ஆவோம்; உனக்கேநாம் ஆட்செய்வோம்;
மற்றைநம் காமங்கள் மாற்றேலோ ரெம்பாவாய். 29

வங்கக் கடல்கடைந்த மாதவனைக் கேசவனை,
திங்கள் திருமுகத்துச் சேயிழையார் சென்றிறைஞ்சி
அங்கப் பறைகொண்ட வாற்றை, அணிபுதுவைப்
பைங்கமலத் தண்டெரியல் பட்டர்பிரான் கோதை
சங்கத் தமிழ்மாலை முப்பதும் தப்பாமே [சொன்ன
இங்குப் பரிசு உரைப்பார், ஈரிரண்டு மால்வரைத்தோள்
செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால்
எங்கும் திருவருள்பெற்று இன்புறுவ ரெம்பாவாய். 30

உ

அன்ன வயற்புதுவை ஆண்டாள் அரங்கற்குப்
பன்னு திருப்பாவைப் பல்பதியம்—இன்னிசையால்
பாடிக் கொடுத்தாள்நற் பாமாலை பூமாலை
சூடிக் கொடுத்தாளைச் சொல்லு.

# திருப்பாவை நுதலிய பொருள்

1. பகவான் குணங்களில் தம்மை மறந்திருக்கும் பக்தர்களைப் பகவான் பூசைக்குப் பாகவதர்கள் அழைத்தல்.

2. பகவானுக்குத் தொண்டு செய்வதே வாழ்க்கையின் பேறு.

3. உத்தமனான பகவான்பேர் பாடி அவனை அநுபவிக்கும்போது உலகம் நலம்பெறும்.

4. பகவானின் குணக்கடலில் திளைத்து உலகம் வாழும் பொருட்டுத் தொண்டு செய்கின்ற ஆசிரியர்கள் மேகம் போன்றவர்கள்.

5. பகவானைத் தொழுது பாடிச் சிந்தித்தால் பிழைகள் எல்லாம் தீயில் இட்ட தூசாகும்.

6. பகவானிடம் புதிதாகப் பக்திகொண்டவனுக்கு ஞானம், அநுஷ்டானமாகியவற்றை உபதேசித்தல்.

7. பகவான் விடயத்திலும் பார்க்கப் பாகவத விடயம் சிறந்தது.

8. பகவானிடம் அபிமானம் கொண்ட பாகவதரை முன்னிட்டுத் தான் பகவானை அணுகுதல் வேண்டும்.

9. பாகவதர் கூட்டத்தில் சேர்வதற்குத் தடையாய் உள்ள தேக ஆத்தும அபிமானங்களை நீக்குதல் வேண்டும்.

10. பகவானையே உபாயமாகப் பற்றியிருக்கும் பாகவதர் பிறவிடயங்களைக் கவனிக்கமாட்டார்.

11. உத்தமரான பாகவதர் சீடர்கள் எல்லோருக்கும் உபதேசம் செய்தல்.

12. பகவான் அடியார்களுக்கு இரங்குவதுபோலப் பாகவதரும் சீடர்களுக்கு இரங்கி அருள்செய்வர். பகவத் விடயம் எங்கும் பரவுதல்.

13. பகவான் குணஅநுபவத்தில் ஈடுபட்டுத் தனித்திருப்பவரை பாகவத அநுபவம் பெறுவதற்கு வேண்டுதல்.

14. பாகவத சமுதாயத்தில் முக்கியமானவர் ஞான, பக்தி, வைராக்கியம் உள்ளவர்.

15. பாகவத சமுதாயத்தை விரும்புபவர் பிறர் குற்றத்தைத் தம் குற்றமாகக் கருதுபவர்.

16. ஆசாரிய சம்பந்தமுள்ளவர்களை முன்னிட்டுக் கொண்டு ஆசாரியனைத் தொழுதல் வேண்டும்.

17. ஆசாரியனைப் பற்றுக்கோடாகக் கொண்டு கோயிலை உணர்ந்து இறைவனுக்கு அந்தரங்கமானவரை முன்னிட்டு இறைவனைத் துயில் எழுப்புதல்.

18. பிராட்டியை முன்னிட்டுத்தான் பகவானை அடைய முடியும்;

19. பகவான் பிராட்டியின் பக்திக்கு வசப்பட்டிருக்கிறான். பிராட்டியும் பெருமானும் அடியார்களுக்குக் கருணை புரிபவர்.

20. அகங்காரம், மமகாரத்தை நீக்கி ஞானத்தை நல்கி இறைவனை அடைய வழிவகுக்குமாறு பிராட்டியை வேண்டுதல்.

21. கறவைப் பசுக்கள் போன்ற ஆசிரியர்களால் சீடர்களிடம் ஞானம் பொங்கிவழிதல்.

22. பகவானிடம் உபாயம் என்னும் அதிதீவிர ஞானத்தைப் பிறப்பிக்குமாறு வேண்டுதல்.

23. பாகவதரின் விருப்பத்தை நிறைவேற்றப் பகவான் தானே முந்தி வருவான்.

24. பகவான் வரும்வரை காத்திருக்காமல் தாமே முந்திவந்தமையை மன்னிக்குமாறு ஆறுவிதமாகப் போற்றுதல்.
25. பகவானையும் அவன் கல்யாண குணங்களையும் பாடித் துயரம் போக்கி ஆனந்தமடைதல்.
26. பகவான் அடியவர்கள் அன்புக்கு ஆட்படும் இயல்பினன்.
27. ஞானத்தைப் பூரணமாகப் பெற்றுப் பிரார்த்தனை செய்ததும் வருத்தம் எல்லாம் தீரும். அதுவே வேண்டத்தக்கது.
28. பகவானை உபாயமாகப் பற்றும் அன்பருக்குரிய இலட்சணங்கள் இவை என்பது.
29. பகவான் அருளைப்பெற்று அகங்காரத்தை நீக்கி அவனுக்கு ஆட் செய்யப் பெறுதல்.
30. இப்பிரபந்தம் கற்பவர் திருமாலின் திருவருள் பெற்று ஆனந்தம் அடைவர்.

❋❋
❋❋

தயாரித்தவர்: க. சி. குலரத்தினம்

உ

## அன்பான வேண்டுகோள்

மில்க்வைற் உற்பத்திப் பொருட்களுக்கு நீங்கள் அமோகமாக ஆதரவளித்தால் நாங்கள் நாட்டுக்கு நன்மைதரும் இலவச வெளியீடுகளைப் பிரசுரித்து அன்பளிப்புச் செய்ய உதவியாயிருக்கும்:

பார்த்து வாங்குங்கள் **"மில்க்வைற்"**

இப் புத்தகத்தை வாசித்த
பின்னர் தயவு செய்து
பிறருக்குங் கொடுத்து
உதவுங்கள்.

ஒரே செலவில் நமக்கும் பிறர்க்கும்
நயம்வர வாய்ப்பான வழியை
நாடுதல் உத்தமமல்லவா?

நாடு நலம்பெற நாம் நற்சேவை செய்ய
எமது உற்பத்திப் பொருள்களை
வாங்கி உபயோகியுங்கள்.

வணக்கம்.

- மில்க்வைற் நீல சோப்
- நியூ மில்க்வைற் சோப்
- மில்க்வைற் பார் சோப்
- மில்க்வைற் சலவைப் பவுடர்
- மில்க்வைற் 20 சதம்
- 10 சதம் சோப்
- மில்க்வைற் மெடிக்கேட்டற் சோப்
- நீம் வாசனை சோப் (வேப்பெண்ணெய் கலந்தது)
- நீம் சுகாதார தூபம்
- ஒலிவ் ஸ்நானப் பவுடர்

வாங்கிப் பாவித்து அதிக லாபம் அடையுங்கள்.

## அன்பான வேண்டுகோள்

நாங்கள் வெளியிட்டுள்ள சமயம், இலக்கியம், விவசாயம் சம்பந்தமான நூல்களைப் பெற விரும்புவோர், நூலொன்றுக்கு மில்க்வைற் நீலசோப் மேலுறை 15 அல்லது பார்சோப் மேலுறை 2 அல்லது நீம்சோப் மேலுறை 2 அனுப்பிப் பெற்றுக்கொள்ளலாம்.

சாந்தி அச்சகம், யாழ்ப்பாணம்.